රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division

"නිල මැදුර", ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
"Nila Madura", Elvitigala Mawatha, Colombo 05.

TP : +94 112 050 450
Fax : +94 112 369 971
Email: info@moha.gov.lk
Web : www.moha.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: HA/3/13/2-3

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2025.09.

சகல மாவட்டங்களினதும் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்

சகல பிரதேச செயலகங்களினதும் செயலாளர்கள்

**<u>கிராம உத்தியோகத்தர்களால் வதிவிடச் சான்றிதழ் (DS4) வழங்குவதற்கான பொதுவான ஆலோசனைகள்</u>**

வதிவிடச் சான்றிதழ் (DS4) வழங்கும் போது கிராம உத்தியோகத்தர்கள்/சேவை பெறுநர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து தொடர்ச்சியாக இந்த அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

02. அந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இந்த அமைச்சினால் தற்போது வழங்கப்படுகின்ற வதிவிடச் சான்றிதழை (DS4) திருத்தம் செய்வது தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு, அதன்போது முன்மொழியப்பட்டுள்ளவாறு சான்றிதழில் திருத்தங்களை மேற்கொள்ளும் வரை, தற்போது வதிவிடச் சான்றிதழை வழங்கும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து பொதுவான ஆலோசனைத் தொகுப்பொன்று இத்துடன் வெளியிடப்படுகிறது.

03. அந்த ஆலோசனைகளை உள்ளடக்கிய ஆவணம் இணைப்பு 01 இல் இணைக்கப்பட்டுள்ளதோடு, எதிர்காலத்தில் வதிவிடச் சான்றிதழ் (DS4) வழங்கும்போது இந்த அமைச்சினால் இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் படி செயற்படுமாறு அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துமாறு தயவுசெய்து அறிவித்துக் கொள்கிறேன்.

04. மேலும், வதிவிடச் சான்றிதழ்களை வழங்கும்போது சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள்/கிராம உத்தியோகத்தர் நாட்குறிப்பில் அச்சிடப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி விவேகத்துடனும் நல்லெண்ணத்துடனும் செயல்படுதல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள்:-

01. சகல அமைச்சுக்களினதும் செயலா — தயவுடன் தங்களுக்கு கீழுள்ள குறித்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அறியப்படுத்துவதற்காக

02. தேர்தல் ஆணையாளர் நாயகம் - தய.அறி.கொள்.வகை.